ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

மதாந்தரங்களிலுள்ளவர்கள் தம் மதாசாரவிஷயங்களில் நம்பிக்கை இல்லாதவர்களாயினும் சீர்திருத்தக்காரர்களால் பலவிதத்திலும் கலைக்கப் பட்டவர்களாயினும் தங்களினத்தாரோடு ஒற்றுமையைக் காட்டவேண்டி மதக் கட்டுப்பாட்டிலேயேயிருப்பார்களேயன்றி மதநூல்களைக்கொளுத்தி விடவேண்டும்என்றாவது தமது முன்னோர்களறியாதவர்கள் என்றாவது அவர்கள்உலகத்தைக் கெடுத்துவிட்டார்களென்றாவது கூறிவிடத்துணிய மாட்டார்கள். நமது ஹிந்துமதத்தினரோவெனில்மதநூல்களைக்கொளுத்தி விடவேணுமென்றும், முன்னோர்கள் மதியற்றவர்களென்றும், பொது நன்மைபாராட்டாதவர்களென்றும் அவர்வழி நடக்கூடாதென்றும்கூறத் துணிந்துவிட்டார்கள். ஸேதுமுதல் இமயமலைவரை ஒரேவிதமாக விருஷ்டிகாலந்தொடங்கி நாளதுவரை நிலைநாட்டப்பட்ட தர்மமார்க்கம் தவறாம். இரண்டு மூன்றுவருஷத்திற்குள்ளாக இவர்களுக்குத் தோன்றியதுதான் சரியாம். இதென்ன விபரீதஞானம்? இந்த விபரீதஞானத்தின்வலிமையா லிவர்கள் தாறுமாறாய்க் கூறுவதை எல்லோரும் நம்பிவிடவேண்டுமாம். அப்படி நம்பாதவர்களை "வைதீகச்சைத்தான்" என்று கூசாமல் கூவுகின்றனர். விதவாவிவாஹம் முதலிய அகாரியங்களைச் சட்டமாக்கிவிட்டு மூலையிலிருந்த விதவைகளையும்கிளப்பிவிட்டு கர்ப்பத்தடைமசோதாவையுங்கொண்டுவரப்பார்க்கிறார்களே? இவர்களதுபுத்திசாலித்தனம்என்னே? விதவைகளுக்குவிவாஹம்செய்விப்பானே? கர்ப்பத்தடைசெய்யயோஜனை செய்வானே? வரதக்ஷிணைக்காக பயந்து பாலிகாவிவாஹத்தைத் தடுக்குமிவர்கள் விதவைக்கும் கிழவிக்கும் விவாஹத்தை விரிப்பது வரதக்ஷிணை இல்லாமற்செய்ய வழி என்று எப்படி நினைக்கிறார்களோ தெரியவில்லை. இப்படி இவர்கள் கூறுவதையெல்லாம் கேட்காவிடில் வைதிகர்மண்டையை உருட்டுகிறார்கள். இதற்காக பயந்து பிரமாணங்களுக்கு முற்றிலும் விரோதப்பட்ட விஷயங்களை வைதிகர் சம்மதிப்பது எப்படி? அதற்காக வைதிகர்களை துவேஷித்தால் "அன்னத்வேஷம், ப்ரம்மத்வேஷம் ஆயுஸ்ஸைக் குறைக்கும்" என்ற ஸித்தாந்தமே. முடிவுக்கு வரும். அப்படி ஆயுஸ்ஸைக் குறைத்துக்கொள்ளாமலிருப்பார்களாக.

சுபம். ! பத்திராதிபர்,

ஆர்யதர்மம்.

சுக்ல-௵ ஐப்பசி-௴ ௧௨

வைதிகர் கொள்கை.

ஜகத்காரணவிஷயத்தில் ஸாங்கியமதத்தைக் கண்டிக்க, ப்ரம்மஸூத்திரம் முதலாவது அத்தியாயம் 1-வது பாதம் 5-வது அதிகரணத்தில் அனேக ஹேதுக்கள் கூறிவரும்போது ஸூத்திரகாரர் 'கதிஸாமான்யம்' என்றதோர் ஹேதுவையும் கூறியிருக்கின்றார். அதன் கருத்தாவது "ஸாங்கியாதிமதங்களிற்போல் உபநிடதங்களிலும், சிலவிடத்து பிரதானம் காரணம், சிலவிடத்து பரமாணு, சிலவிடத்து வேறொன்றிவ்வாறாகக் கூறியிருக்குமாயின் அந்தவிடத்தையனுஸரித்து ஒருஸமயம் ப்ரம்மத்தைத்தவிர வேறு எதையாவது ஜகத்காரணமாகக் கொள்ளலாம், அப்படிக்கில்லையே. உபநிடதங்களெல்லாவற்றிலும் ஒரேவிதமாகப்ப்ரம்மமொன்றுதான் காரணமென்று கூறப்படுவதால் ஸாங்கியர் ஒப்புக்கொள்ளும் பிரதானம் ஜகத்கார்ணமென்று ஆசிரயிக்கமுடியாது. ஆனால் ப்ரம்மந்தான் காரணமாகும்" என்று. அனேக காரணங்களுள் இந்தக் காரணம் மிகச் சிறந்ததாம். இதுபோலவே தர்மவிஷயத்திலும் வேதம், ஸ்மிருதி, புராணம் முதலிய ஸகலப்பிரமாணக்கிரந்தங்களிலும் ஒரேவிதமாகக் கூறியிருப்பது பெரிய பிரமாணமாகும். பிரகிருதத்தில் விவாஹவிஷயத்தில் ஸகலப்பிரமாணக்கிரந்தங்களும் நியாயமாக குணோபஸம்ஹாரம் செய்து பொருட்படுத்தப்படும்பொழுது "பாலிகாவிவாஹத்தைத்தான் முக்கியமாக நிரூபிக்கின்றன. சுருதியில் பிரௌடாவிவாஹந்தான் கூறப்படுகின்றது. விதவாவிவாஹந்தான் கூறப்படுகின்றது" என்று கண்மூடித்தனமாகச் சொல்லிவிடுவது காரியத்தை ஸாதித்துவிடமுடியாது. ஒரு சுருதிவாக்கியத்திற்கு அர்த்தம் சொல்லுவதானால் இதர வாக்யங்களின் அர்த்தத்திற்கு விரோதப்படாமல் சொல்லவேண்டும். அப்படியிருக்கையில் சுருதி, ஸ்மிருதி முதலிய ஸகலப்பிரமாணக்கிரந்-

தங்களுக்கெல்லாம் விரோதமாக தனது மனோத்ஸித்தமான அர்த்தத்தைக் கூறிவிட்டால் ஒன்றையும் விசாரிக்காமல் உடனே யாவரும் ஒப்புக்கொண்டுவிடவேண்டியது என்று நிர்ப்பந்திப்பது நடுநிலைமை வகிப்பவர்கட்கழகன்று. இதற்காக பிரமாணக்கிரந்தங்களையே அழித்துவிடுவோமெனப் பயமுறுத்தலுக்கு ஆரியச்சிறுவர்கள் பயந்துவிடமாட்டார்கள். பனங்காட்டு நரி சலசலப்புக்கஞ்சாது. ஹிரண்யாக்ஷனைவிட தவம்புரிந்து வான்பெற்ற வியாபகன் இக்காலத்தில் யாருமில்லை. அவன் வேதங்களைக் கொண்டு போனதுபோல் எவராலும் கொண்டுபோகமுடியாது. ஒருவாறு இவர்கள் கையில் கிடைத்த பழைய ஓலைச்சுவடியையோ அல்லது அச்சிட்டவைகளையோ கட்டிக் காவேரியில் விட்டுவிடலாம், அல்லது தீயில் வைத்துக் கொளுத்திவிடலாம். அதனால்மாத்திரம் பிரமாணக்கிரந்தங்கள் அழிந்துவிடாது. ஆர்யர்களால் தன் மனதில் நிலைக்கச்செய்யப்பட்டிருப்பதை எப்படி மாற்றமுடியும்? அதனால் வைதிகர்களை வீணாய்த் தூஷிப்பதைவிட்டு யாவரும் நல்வழி நாடுவீர்களாக.

பத்திராதிபர்.

இனிச் செய்யவேண்டியதென்ன?

எங்கு கண்டாலும் சாரதாமசோதா என்ற பேச்சாகவே இருக்கிறது. பாலர்களும் வியக்கின்றனர்; ஆமோதிக்கின்றவர் பலர், அனுசோசனம் செய்கின்றவர் பலர். இனி இதன் முடிவு யாது? ஆங்காங்கு நம்மவர்கள் கண்டனக்கூட்டம் கூட்டி அலர்கின்றனர். அன்னவர்களைப் பரிகசிக்கின்றவர் பலர், இனி என்ன ஐயா செய்யப்போகின்றீர்கள், சாமியைக் கும்பிடுங்கள் என்றும் நகைக்கின்றனர். தன் கையே கண்ணைக் குத்துவதுபோல் பிராமணரல்லாதாரின் ஆரவாரம் ஒருபுறமிருப்பினும் பிராமணனெனப் பெயர் வைத்துக்கொண்டு மேற்றிசை நாகரீகத்தில் மூழ்கியவர்கள் இச்சமயம் நம்மை ஏளனம் செய்வதுதான் வருந்தத்தக்கது. தன் பிராமணத்தன்மையை மறந்து பிராமணர்கள் கொடுமை அநியாயம், இவன்கள் தான் சுகமடையவே வழிதேடிப்பிறரைவஞ்சித்து உன்னதநிலையிலிருந்துவந்தான். கெட்டிக்காரன் புளுகு எட்டு

நாள்என்று சொல்வதுபோல் இவன்கள் பாச்சா இனி பலிக்குமோவென்றும், பஞ்சமர்கள் தங்கள் உரிமையையடைய முன்வருவது நியாயமென்றும், ஸ்திரீகள் தங்கள் ப்ரம்மஸ்ருஷ்டியில் சமஅந்தஸ்துள்ளவர்கள் என்பதை அறியத் தலைப்பட்டுவிட்டனரென்றும், வேதம் சாஸ்திரம் என்ற கட்டுப்பாட்டு முழக்கம் இனிச் செல்லாதென்றும் இவர்களே பேசுகிறார்கள். இத்தகையோரை நீர் இப்போது எந்த ஜாதியைச்சார்ந்தவர்? எம்மதத்தைத் தழுவியிருக்கிறீர்? உமக்கு வேதசாஸ்திரம் உண்டா? அதை இயற்றியவர் யார்? அதில் யாது கூறியிருக்கிறது? அதன்படிதான் நீர் நடக்கிறீரோ? உம் தகப்பன் பாட்டன் எதை அநுஷ்டித்தார்கள்? இம்மாதிரி உண்மையை அவர்களும் அறிந்துவிட்டார்களா? இல்லையேல் அவர்கள் புத்திசாலிகளல்லவென்று உமது எண்ணமா? புத்திசாலிகள் என்றால் அவர்கள் நடத்தையை என் விட்டீர்? நல்லது இவ்வாறு உண்மையை அறிந்து கிட்டுகின்ற நீர் இப்போது துணிபுடன் திட்டிப் பேசுவதுபோல் உம்மைப்போல் நவீன சாஸ்திரம் கண்டவர்களுடன் கலந்துகொண்டு உமது மனப்போக்குப்போல் அனுஷ்டானம் செய்துகொண்டு இப்போதிய பிராமணவேஷத்தை என் விடவில்லையென்றெல்லாம் கேட்கிறோம். விடையளியுங்களேன்? இருக்கட்டும், தற்சமயம் நாம் பேசத் தகுதியற்றவர்கள் இம்மசோதா சட்டமாய்விட்டதென்று வைத்துக்கொண்டே பேசுவோம், அப்போது நாம் என்செய்வோம்? சும்மாவிருக்கலாமா? முடியாது. ஏனெனில் இப்போது வடகோடியில் ஒரு புருடனும் தெற்கில் ஓர் ஸ்திரீயும் இந்தியாவைத் தாங்குவதும் பக்கபலமாய்ப் பல சீர்திருத்தக்காரர்கள் அசையாமல் கார்க்கவும் நிற்பதால் இம்மசோதாவென்ற ஒரு தூணுக்குப்பலமாய் அநேக தூண்களை நாட்டமுயலுவார்கள். அப்பெரிய கட்டிடத்திற்கு இது முகூர்த்தக்கால் எனலாம். அவைகளில் ஒவ்வொன்றையும் முன்பே கூறி இருப்பினும் ஈண்டிங்கும் கூறுகின்றேன். 1. விதவாவிவாஹச் சட்டம் முன் இருப்பினும் அதை அனுஷ்டிக்காததால் நம் இளம் கைம்பெண் சகோதரிகள் படும்பாடு சொல்லத்தரமல்ல. நான் என் அனுபவத்தைக்கொண்டு பற்பல வீடுகளில் பார்த்து நேரில் அவர்களைக்கேட்டதில் இன்ன கஷ்டமென்பதை வெளியிடுகின்றனர். இதைக் கண்கூடாய்ப் பார்த்தேன். ஆகவே அத்தகைய ஸகோதரிகளின் நன்மைக்கும் தேசமுன்னேற்றத்துக்குமாக இத்துணை

வயதுவரையாவது ஸ்திரீகளுக்கு மறுவிவாகம் அவசியம்செய்தே தீரவேண்டும். குறிப்பிட்ட வயதுக்குட்பட்ட ஸ்திரீகளின் கணவன் இறந்து 1-மாதம் அல்லது 1½-மாதத்திற்குள் அவளுக்கு மறுமகனைத் தேடிக்கொடுத்துவிடவேண்டும். இல்லாவிடில் இவ்வளவு தண்டனையும் அபராதமும் உண்டெனலாம். இனி நெடுநாம் இதைச் சொல்வது ரஸாபாஸம்தான். ஆகையால் விடிந்ததுமுதல் இரவுவரை கோர்ட்டுக்கொல்லையும் குத்துக்கொலையுமே ஏற்பட்டு அடக்குவாரின்றி தலைகீழாய்ப் போய்விடும். இதனால் நாம் பேசாமலிருக்கவும் முடியாது. இனி நம் முயற்சி பயன்படுமோவெனில் இதற்கும் உத்தரவாதம்செய்ய தற்காலம் யாரும் முன்வரமாட்டான். இதில் ஆஸ்திகர்கட்கு தன்தன் மனமே உத்தரவாதமாகவேண்டும், இவ்விதம் எண்ணியே அநேகவிடங்களில் கூட்டம்கூட்டி நம்மவர் என்ன செய்வதென்று யோஜனை செய்துகொண்டிருக்கிறார்கள். இதற்காக மதுரையில் நாங்கள் பிரதிதினமும் மாலையில் ஒவ்வொரு தெருவிலும் மீட்டிங்கு கூடி நமக்கு வந்த தீங்கையும் வரக்கூடியதையும் சீர்திருத்தக்காரர்களுடையவும் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுடையவும் அட்டூழியங்களையும் விஸ்தரிப்பதுடன் இது எல்லோருக்கும் தீங்கை விளைவிக்குமென்று நியாயங்களையும் எடுத்துக்கூறுகின்றோம். சாஸ்திரமஹிமையை இனிக்கூறவேண்டாமென்பது எங்களது தற்போதையக் கொள்கை. இச்சட்டத்தைமீறி அவர்களிடம் தண்டனைக்கு ஆளாவோமேயொழிய மதத்தை விடமாட்டோமென்று உறுதிமொழியில் கையொப்பம் வாங்குகின்றோம். சுமங்கலிகள் இந்நவராத்திரியில் இரண்டு சுக்கிரவாரம் வருவதால் அவ்விரண்டிலும் மீனாக்ஷி ஸன்னிதியிலோ, தாயார்ஸன்னிதியிலோ சென்று மாவிளக்கேற்றி எங்களைப் பாழ்செய்யவந்த இம்மசோதாவை விலக்கும்படி வைஸ்ராய்க்கும் சக்கிரவர்த்திக்கும் புத்தி கொடுக்கவேண்டும் தாயே! என்று பிரார்த்திக்க ஏற்பாடுசெய்தோம். அவ்விதமே அன்று 100-க்குமேல் சுமங்கலிகள் செய்தனர். மூன்று வேதங்களின் பாராயணமும் விதிப்படி நடக்கிறது.

भारतमण्डले इदानीं वेदशास्त्रमर्यादोल्लंघनबद्धकङ्कणानां पापिना शमनार्थं सर्वेषां महाजनानामास्तिक्याभिवृद्ध्यर्थं सर्वेषां ऐकमत्यसिद्ध्यर्थं तेषां तेषां स्व स्ववर्णाश्रमानुगुणकर्मश्रद्धाभिवृद्ध्यर्थं

"பாரதமண்டலத்தில் இப்போது வேதசாஸ்திரங்களின் எல்லையை மீறி நடப்பதில் மிக ஆவல்கொண்டவர்களான பாபிகள் அடங்கு வதற்கும், ஸமஸ்தமகாஜனங்களுக்கும் ஆஸ்திக்கியம் மேலிடும் பொருட்டும், எல்லோருக்கும் நேசம்பெருகும்பொருட்டும் அவரவர் களுக்கு தங்கள் தங்கள் வர்ணாச்ரமத்திற்குத் தக்க கன்மத்தில் சிரத்தை மேலிடுவதற்காகவும்" என்று ஸங்கல்பித்துக்கொண்டே வேதபாராயணம் ஆரம்பிக்கின்றனர். இவ்விதமே ஒவ்வொரு பட் டணம் தாலூகா கிராமங்களிலும் நடத்த ஆரம்பித்தால் ஈசுவரா அனுக்கிரகம் சீக்கிரம் கைகூடும். இவ்விதமெல்லாம் நடப்பதைப் பற்றி ஒரு பத்திரிகையிலும் பிரசுரமாகவில்லை. அதுபோலவே அடுத்த ஊர்களில் நடப்பது எங்களுக்குத் தெரியவில்லை. நமக்கே தெரியாமலிருக்கும் இவ்விஷயம் எவ்விதம் அரசாங்கத்தாரை மலை மேல் போய் எழுப்பிவிடும். இதற்காகவே நான்நமக்கென்று பத்தி ரிகை இன்றியமையாதது. அதுவும் சீக்கிரம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் நான் பன்முறை கதருகிறேன். ஆஸ்திகர்களே! மனம் தளரவேண்டாம், நம் முயற்சிக்குத்தான் ஈசன் அனுக்கி ஹம் புரிவார். சீக்கிரம் சுகம் பெறுவோமாக. சுபம்.

M. N. சுப்பிரமணியசாஸ்திரி.

புராண விமர்சம்.

விடாமுயற்சி வீணாகாது.

ஆஸ்திகர்களே !

நாம் இதுநாள்வரை ஆஸ்திகாசாரம் என்னவென்று மனதா லும் நினைக்காமல் பலரும் காலங்கழித்துவிட்டோம். அதற்கு ஈசன் தக்க உபாயமாய் "சாரதாபில்லை" கொண்டுவந்துவிட்டார். இந்த பில் (Bill) ஆஸ்திகர்களை நன்கு கண்விழிக்கச் செய்துவிட் டது. இந்த பில் ஆஸ்திகர்களின் மனதைப் புண்படுத்தக்கூடிய தேயாம். மனம் நொந்து ஈசனைப்பிரார்த்தித்து தக்க வழியாய் முயற்சிசெய்வதே இதற்கு சரியானஉபாயமுமாகும். பில் பாசாய் விட்டதே இனி நாம் என்ன செய்வதென்று சும்மாவிருதீர்கள். இதைத்தடுக்கப் பாடுபட்டும் பயனில்லாமல் போய்விட்டதென நினையாதீர்கள். அமிருதத்திற்கென்று தேவர்கள் பாற்கடலைக்

கடைந்தபோது அவர்களின் மனதைக் கலக்கக்கூடிய விஷம் முதலில் புறப்பட்டது. அதைக்கண்டு பயனில்லையெனக் கருதாமல் அமிருதம் கிடைக்கும்வரை நன்கு முயற்சித்தார்கள். பிறகே அமிருதபானம் செய்தார்கள். 'பகிரதனும்' கங்கையையடைய பல கஷ்ட நஷ்டங்களையும் பொறுத்து விடாமுயற்சி செய்து சுகம் பெற்றான். தற்காலம் "சாரதா" பில்லால் வரப்போகும் சங்கடங்களுக்கு நமது சுகப்ரும்மாதிரிஷிகள் சரியான உபதேசத்தால் மனதை ஊக்கமடையச்செய்திருக்கிறார்கள். சங்கடாதிக்கியமே சமீபவெற்றியின் இலக்ஷணமாகும். ஆஸ்திகர்களின் சக்தி சாமர்த்தியத்தை வெளியிட்டு மேன்மைபெற இந்த பில்லே தக்க காரணமாகும். இதை இம்மட்டோடு விட்டுவிட்டால் இவை போன்ற இன்னும் பல கஷ்டங்களுக்கு உள்ளாவோமென்பதில் ஐயமில்லை. தேவர்களைப்போல முயற்சியை தீவ்விரமாய்ச்செய்தால் இக்கஷ்டம் விலகுமென்பது உண்மை. இம்மார்க்கத்தையே கடைப்பிடித்து நடக்க நம்மை சாத்திரங்கள் உபதேசித்து வருகின்றன.

(1) காரியவிக்னம் முயற்சிக்கும்,

(2) முயற்சி மேன்மைக்கும்,

(3) முயற்சியில் தூக்கம் முக்திக்கும் காரணம்,

நாம் முயற்சிக்கும் காரியத்திற்கு சிறிது விக்கினம் வருமேயானால் அது ஜயகால இலக்ஷணமென்று அறியவேண்டும். விக்கினம் வரும்போது தீவிரமுயற்சி செய்வான். அதனால் ஜயமும் பெறுவான். வித்வான்களும், மனிதர்களும், பலவான்களும் நமது முன்னேற்றத்தை எவ்வளவு தடைசெய்தாலும் அது தடையாகா.

இவர்கள் ராஜ்ஜியத்திற்கு அலங்காரபாத்திரங்களே. ஜனஸங்கியையானது ராஜ்ஜியஜீவனாகமாட்டாது. தரித்திரர்கள், சாதுக்கள், ஈசனருள் பெற்றவர்கள் இவர்களே ராஜ்ஜியஜீவனாவார்கள். சங்கம்சேர்ந்த முயற்சியே சபலமாகும். வானரங்கள் சங்கம் சேர்ந்து முயற்சித்ததால் சமுத்திரத்திலும் அணைகட்டினார்கள். பாண்டவர்களுக்கு காரியவிக்கினம் வருந்தோறும் முயற்சியால் முன்னேற்றமும் கூடவே வந்துகொண்டிருந்தது.

நதியானது ஓரிடத்திலும் தடையின்றி ஓழுகிச்சென்றால் அதற்கு சக்தி மிக அல்பமாகும். அது ஆரம்பமுதல் தடைபட்டு ஒழுகிவருமேயாகில் அவ்வளவுக்கும் வேகசக்தி அதிகப்படும். இந்த வேகசகதியால் பெரிய மில் யந்திரங்களும் நடத்தப்பட்டும் வருகின்றன. இதற்கு தடையே முக்கிய காரணம். ஐக்யத்துடன் செய்யும் முயற்சிக்குத் தடைவருமேயானல் அது பெரிய காரிய சாத்தியத்திற்குக் காரணமாகும். காரியவிக்கினம் முயற்சிக்குக் காரணமென்பது இதனல் விளங்கிற்று. முயற்சியின்றி மோக்ஷமில்லை. (1) குளத்துப் பாசியை முயற்சியால் நீக்கினல் நல்ல ஜலத்தைப் பார்க்கலாம். அதிக மத்ஸ்யம் (மீன்) உள்ள தடாகத்தில் வலைவீசி முயற்சித்தால்தான் மீனைப் பெறலாம். (2) பாலை நன்கு காச்சி மோரைவிட்டு பக்குவமாகக்கடைந்து முயற்சித்தால் வெண்ணை தின்னலாம். (3) எந்த லாபத்திற்கும் முயற்சிசெய்தே தீரவேண்டும். இம்முயற்சியாலேயே திரௌபதி, குந்திதேவி, ஸீதாதேவி, ருக்குமணி, துருவன், பாண்டவர்கள், கோபஸ்திரீகள், இவர்கள் ஈசுவரலாபம் பெற்று சுகமடைந்தார்கள். இதனல் முயற்சியே மேன்மைக்குக் காரணமென்பது விளங்கிற்று.

"துக்காதிக்யமே துன்பநிவர்த்தி" வஸ்திராக்ஷேபத்தால் பரம துக்கமடைந்தபிறகே "திரௌபதி"க்கு பகவான் அருள்செய்தார்.

துருவாசரின் பிக்ஷாகாலத்திலும் துக்கத்துடன் தியானித்த பிறகே பகவான் தரிசனம் கொடுத்தார்.

கஜேந்திரன் ஆயிரவருடம் முதலையுடன் யுத்தம்செய்து சோர்ந்து சக்தியற்று கதியின்றி துக்கத்துடன் துதித்த காலததிலேயே பகவான் துன்பமறுத்தார்.

பாண்டவர்கள் அடிக்கடி துன்பமடைந்ததால் அடிக்கடி பகவானையும் அடைந்து சுகம் பெற்றார்கள். பாண்டவ மாதாவாகிய குந்திதேவி

विपदः सन्तु ताः शश्वत् तत्र तत्र जगद्गुरो ।
भवतो दर्शनं यत्स्यादपुनर्भवदर्शनम् ॥

ஹே ஜகத்குரோ! ஆபத்துக்கள் அடிக்கடி வந்துகொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் அக்காலங்களில் மோக்ஷத்தையளிக்கக்கூடியவனுகிய பகவானின் தரிசனம் உண்டாகும் என்றாள்.

கஷ்டமின்றி சுகமில்லை, தேவர்கள் அமிருதம் உண்பதற்கும் பகீரதன் கங்கையடைவதற்கும் விசுவாமித்திரர் பிரும்மரிஷிப் பட்டம் பெறுவதற்கும் லக்ஷக்கணக்கான வருடங்கள் கடுந்தவம் புரிந்து கஷ்டமடைந்தபிறகே இஷ்டசுகம் பெற்றார்கள்.

சுவர்ணம் உத்தமவஸ்துவானாலும் அதை அழகான ஆபரணமாகச் செய்யவேண்டுமானல் அக்னியில் அடிக்கடி வாட்டி இரும்பில் வைத்தடித்து அதை மேன்மைப்படுத்தவேண்டியிருக்கிறது. இம்முறையின்றி மேன்மை பெறுவதில்லை. அதுபோல மனிதன் அடிக்கடி கஷ்டமடைவது மனப்பக்குவத்தினுல் மேன்மையடைவதற்காம். சிற்பி ஓர் பிம்பம் செதுக்கும்போது நல்ல ரூபம் வருவதற்குமுன் பல கோணலாகவே காணப்படும். அதைப்பார்த்து சிற்பி மனச்சோர்வடைகிறான். ஆனல் விடாமுயற்சியினுல் அதைத் தொடர்ந்து செதுக்கி பூர்ணலக்ஷணம் வந்தபிறகு அந்த பிம்பமானது கோடிக்கணக்கான ஜனங்கள் வணங்கும் பாக்கியம் பெறுகிறது. அதனல் சிற்பியும் சந்தோஷமடைகிறான். அதுபோலவே நமது முயற்சிகளுக்கு வந்து கூடும் சிறு தடைகள் மனச்சோர்வுக்குக் காரணமாகிலும் விடாமுயற்சியால் விக்கினம் நீங்கும். அதுவே தக்க சாதனமுமாகும். தனம் சேர்க்க கஷ்டமடைவது மேன்மைக்கும், தீ காய்ந்து பசனம்செய்வது சுக போஜனத்திற்கும் காரணமாகும். அதிகஷ்டமே அதிமேன்மைக்கு சாதனம். பிரசவவேதனையைப்பொறுத்த ஸ்திரீயே புத்திரசந்தான சுகம்பெறுவாள்.

கஷ்டவேலைசெய்யும் பிராணிகளுக்கு நல்லதீனிகொடுப்பது உலகவழக்கம். ஈசனும் கஷ்டத்துடன் முயற்சிக்கும்நம்போலுள்ளவர்களுக்கும் நற்சுகமளிப்பார். இதனல் முயற்சியில் துக்கமே முக்திக்குக் காரணம் என்பது விளங்கிற்று.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்."

சன்மார்க்கிகளுக்கு பகவான் துணைபுரிவாராக.

K. S. சங்கராமசாஸ்திரி,
கொட்டாரக்கரை.

பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

சோழமன்னர்களின் சரித்திரம்.

(576–வது பக்கத்தொடர்ச்சி:)

அந்த க்ஷேத்திரத்திலுள்ள தேவதைகளையெல்லாம் அர்ச்சித்தான். ஜயசோழன் என்னும் குழந்தை சுக்லபக்ஷத்திய சந்திரன்போல் வளர்ந்தது. குருக்களிடம் அறுபத்திநான்கு கலைகளையுங் கற்றுணர்ந்த அரசகுமாரனை அழைத்துச்சென்று கேரள மன்னன் பொன்போன்ற திருமேனியையுடைய காஞ்சனமாலை என்னும் மகளை அவனுக்கு மணஞ்செய்துகொடுத்தான். கீர்த்திசோழன் மகன் மருமகள் மனைவி இவர்களுடன் சந்தோஷமாய்ப் பூமியையாண்டுவந்தான். பயிர்கள் செழித்தோங்குவதன் நிமித்தம் கீர்த்திமதி என்னும் ஓர் ஆற்றை வெட்டினான். தன் ஸ்தானத்தில் ஜயசோழனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்து 77-வது வயதின் முடிவிற் சிவபதமடைந்து மனையாளுடன் சிவஸாரூப்யம்பெற்று கீர்த்தியுருவாக அவன் ஆனான்.

ஜயசோழன் தனக்கேற்ற மனையாளுடனும் ஆலோசனையிற் றேர்ந்தவர்களும் சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவர்களுமான மந்திரிகளுடனும் நீதிவழுவாது உலகாண்டுவந்தான். சிவகைங்கர்யத்தில் விருப்புடையவனாகவிருந்துகொண்டு பல சிவன்கோயில்களையும் புதுப்பித்தான். அக்கினீச்சுவரர், கதளீவனேசர், புத்ரவ்யஞ்சநேசர், ஸ்ரீவாஞ்சேசர் இவர்களினாலயங்களைக் கட்டினான். ஜயசோழபுரமாகிய கங்குஹாரம் என்னும் நகர (கங்குகொண்டசோழபுர) த்தில் பிருஹதீசரின் ஆலயத்திற் காற்பங்கு குறைவாக வுள்ளதோர் சிவாலயத்தை ஸோமவர்மாவைப்போற் சிற்பத்திற் சிறந்தவனும் அவனுடைய கொள்ளுப்பேரனை(नप्त्रि)க்கொண்டு நிர்மாணஞ்செய்தான். ஸ்ரீமுஷ்ணம், பயத்தூர், (முத்தநகரம்.) விருத்தாஜலம், காளஹஸ்தி இவ்விடங்களிலுள்ள ஆலயங்களையும் மணிமுக்தாநதியின் படிக்கட்டுகளையும் கட்டினான்.

இவ்வாறாக இன்னும் அனேக ஆலயங்களிற்சிவகைங்கர்யஞ் செய்து சம்புவினருளால் கனகசோழன் என்னும் மகனைப்பெற்று சாஸ்திரங்களிற் தேர்ந்த மந்திரிகளுடன் அம்மகனைத் தக்க வய

திற் சிங்காதனமேற்றி அச்சோழமன்னன் 60-வயதில் தன் மனையாளுடன் சந்தோஷமாகச் சிவபதத்தை நாடி ஸாரூப்யம் பெற்றுக் கைலையில் வஸிக்கலானன்.

ஸூதர்:— முனிவர்களே! கீர்த்திசோழனின் பரிசுத்தமான பக்தியைப் பாருங்கள். இக்கதையைக் கூறுகின்றவர்களுக்குச் சிவபக்தி நிலைபெறும்.

24 அத்தியாயம்.

ஸூதர்:— கனகசோழன், விக்கிரமவம்சத்திலுதித்த அரசனின் மகளான சம்பகாங்கி என்னும் பெண்ணை விவாஹஞ்செய்து கொண்டு நீதிசாஸ்திரங்களைக் கற்றுத்தேர்ந்த அமைச்சர்களுடனும் சேனைத்தலைவர்களுடனும் தர்மப்படி அரசாண்டுவந்தான். குடிகளைத் தந்தைபோற் காப்பாற்றினன். பரம்பரையாக ஏற்பட்டுவரும் பக்தியைச் சிவனிடஞ் செலுத்திவந்தான். அவ்வரசன் யானைகள், குதிரைகள், வீரர்கள் யாவரும் விபூதி ருத்திராக்ஷமணிந்துகொள்ளவேண்டுமென உத்திரவிட்டான்.

तद्राष्ट्रेषु जनास्सर्वे भस्मरुद्राक्षधारिणः ।
त्रिपुण्ड्रफालास्सर्वेऽपि जैनाः म्लेछाश्च सङ्कराः ॥
नृपाज्ञया धारयन्ति निष्पापास्तेन तेऽभवन् ।

அவ்விராச்சியத்தில் எல்லோரும் விபூதிருத்திராக்ஷமணிந்தவர்களும், திருபுண்டிரத்தை நெற்றியிற் றரித்தவர்களாகவுமிருந்தனர். ஜைனர்களும், மிலேச்சர்களும் கலவை ஜாதியர்களுங்கூட அரசனுணையாற் றிருநீறு ருத்திராக்ஷம் தரித்தனர். அவர்களும் அதனாற் பாவங்கள் நீங்கிப் பரிசுத்தானார்கள். எங்கு பார்த்தாலும் சிவோற்சவங்களும் மங்களவாத்தியகோஷங்களும்,

पठतां वर्णिवृन्दानां वेदशास्त्रध्वनिस्सदा ।
वेदत्रयाणां शालासु यज्ञैर्मन्त्रक्रियाध्वनिः ।
सदाशिवपुराणानां समाजः शृण्वतामभूत् ।

மூன்று வேதங்களையுங் கற்பிக்கும் பாடசாலைகளில் எப்பொழுதும் படிக்கும் பிரும்மசாரிகளின் வேதசாஸ்திரத்துவனியும், யாகங்கள் கூறும் மந்திரங்களினோசையும், சங்கரரின் சரித்திரங்களைக் கேட்கின்ற கூட்டங்களும் வழங்கிவந்தன. கடைகளிலெல்லாம் தன

தான்யங்கள் நிறைந்திருந்தன. சந்தோஷத்தாற் கொழுத்த சரீரத்தையுடையவர்களாகவிருந்துகொண்டுஸ்திரீபுருஷர்களெல்லோரும் தன்னறம் வழுவாது நடந்துவந்தனர். அங்கு ஆயுதவொலிகளும், நாணியோசையும், ஸங்கீதத்வனிகளும் சிவாலயங்களை நிர்மாணஞ்செய்யுஞ் சிற்பிகளினுளியோசையும் நிறைந்திருந்தன. அன்னாட்டில் மேகங்கள் காலத்தில் மழை பொழிந்தன. பூமியில் ஓரிடமாவது பயிர்களின்றித் தரிசாகக் காணப்படவில்லை.

அவ்வாறாக அச்சோழமன்னன் அரசுபுரிகையில் ஆற்றிற் சிறந்த ஸ்ரீ காவேரியாறு திருவலஞ்சுழி என்னுமூரில் பாதாளத்திற் புகுந்துவிட்டது. எல்லா ஜனங்களும் ஒன்றுகூடி அங்குவந்து சிவஸன்னிதியில் வெள்ளைப்பிள்ளையாரின்முன் நின்று எங்கள் பயிர்களெல்லாம் அழிந்தனவே யெனவுறக்கக்கூவத் தலைப்பட்டனர். சாரர்கள்முகமாயிச் செய்தியறிந்த கனகசோழன் குதிரையேறிச் சேனைகள் சூழ, மந்திரிகளுடனங்குவந்து அங்கு ஓர் பொந்தில் காவேரியின் பிரவாஹநீர் முழுவதும் நுழைவதைக் கண்ணுற்றான்.

பல முயற்சிகள் செய்தும் அதனைத் தடுக்கமுடியவில்லை. இதுகண்ட அரசன் மனம்நொந்து என்செய்வதெனச் சிந்தையிலாழ்ந்து தேனுபுரேச்சுவரரையுந் தேவியையும் சுவேதவிநாயகரையும் வணங்கிச் சன்னிதியிலேயே படுத்துக்கொண்டான். அப்பொழுது ஓர் அசரீரிவாக்கு உதித்தது.

அசரீரவாணீ:— ஏ அரசே! நீயாவது வேறோர் தவசியாவது இப்பிலத்தினுழைந்தாலின்றி இத்துவாரமடைபடாது. வேறொருபாயமும் பலியாது. அவ்வாறு செய்யின் காவேரியில் முன்போற்பிரவாஹமோடும், அதனால் பயிர்கள் செழித்தோங்கி எல்லோருக்கும் நன்மை பயக்கும்.

सर्वेषाञ्च हितं भूयाज्जनानां सस्यवृद्धितः ।
शरीरमस्थिरं राजन् कीर्तिराचन्द्रतारकम् ॥
शिबिर्दधीचिः कर्णश्च ददुः स्वाङ्गं द्विजातये ।
तान्नपश्यामहेभूमौ तेषां कीर्तिस्थिराभवत् ॥

ஏ அரசே! உடலோ நிலையற்றது. புகழோ சந்திரசூர்யர்களுள்ள வரையில் நிலைபெறும். சிபி என்னுமரசன், ததீசியென்னும் முனி

வர், கர்ணனிவர்கள் அந்தணர்களுக்குத் தங்களங்கத்தையளித்தனர். நாமவர்களை இப்பொழுது இப்புவியிற் காணஇயலாது. இருப்பினும் அவர்களின் புகழ்நிலை பெற்று விளங்குகிறது.

இவ்வாறு அசரீரி மொழியைக்கேட்ட அக்கனகசோழன் காவேரியின் நீரில் மூழ்கி திருநீறு ருத்திராக்ஷ மணிகளணிந்து, எல்லோருடைய நன்மையையுங் கருதி, மனையாளைச் சமாதானஞ் செய்வித்து, மஹேசரையும், விக்னேசரையும் வணங்கி, தானப் பிலத்தில் நுழைவதென்ற தீர்மானத்துடனதனருகே வந்தான்.

அந்நாட்டில் வசிக்கின்ற ஆண்மக்கள் பெண்மக்களெல்லோரும் இலக்ஷக்கணக்காக வந்துகூடி வீட்டின்பேரிலும், மாடிகளிலும் மரங்களின் உச்சிகளிலுமேறி நின்றுகொண்டு கண்களில் கண்ணீர் ததும்ப ஸாஹஸச் செயலிற் துணிந்தவரசனையும் அவனைத் துடர்ந்துவரும் அவன் மனைவியையும் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்பொழுதோர் மந்திரிக்கிழவர் கைகூப்பிக்கொண்டு அரசனை வணங்கி கூறலானார்.

மந்திரிக்கிழவர்:- ஏ சோழவேந்தே! கும்பகோணத்தருகே காவேரியின் வடகரையிலுள்ள கோடீச்சுவரமென்னும் தலத்திற் தவஞ்செய்யும் ஹேரண்டரென்னும்முனிவரைவணங்கி உத்திரவு பெற்ற பிறகே நீங்கள் இப்பிலத்தில் நுழையவேண்டும்.

அரசனும் மந்திரிக்கிழவனின் சொல்லை ஏற்றுக் கொண்டங்கு சென்று முனிவரைக்கண்டு வணங்கி முன்னின்றான். 'ஏ சோழனே! தீர்க்காயுளுடன் வாழ்வாயாக. ஏ மாதுசிரோமணியே! தீர்க்கஸுமங்கிலியாக இருந்துகொண்டோர் மகனைப் பெறுவாயாக' என்று ஆசி கூறி என் சொல் வீணாகாதென்று அத்தவசி கூறினார்.

இவ்வாறு ஹேரண்டசித்தரின்மொழிகளால் கனகசோழனும் மந்திரிகளும் மிக்க ஆனந்தமடைந்தனர். எல்லோருக்கும் ஹிதஞ் செய்யக் கருதியஎனக்குஇவ்வாறு பிலப்பிரவேசத்திற்குத் தடை நேர்ந்ததேயென அரசன் விசாரப்படத் தலைப்பட்டான்.

அதுகண்ட மந்திரிகள் ஹேரண்டரை நோக்கிக் கூறினர்.

மந்திரிகள்:—உங்கள் சொல் உண்மையே; ஏ முனியே! அரசனோ மனையாளுடன் பொந்தில் நுழையத்தீர்மானத்துடனிருக்கிறான்.

திருவலஞ்சுழி என்னுமூரிற் காவேரி (मरुद्वृधा)யின் பிரவாஹம் பொந்தில் நுழைந்து விடுகிறது. அதனால் பயிர்களெல்லாம் அழிந்துபோயின. பிரஜைகளும் நாசமடைந்தனர். யாராவதோர் மன்னனோ முனிவரோ நுழைந்தால் தான் அப்பொந்து மூடுமென்று ஓர் ஆகாசவாணி கூறிற்று.

पौराणां रक्षणं कार्यं राज्ञां धर्मस्सनातनः ।

குடிகளைக் காப்பதே அரசனின் முக்கிய தர்மமாகும். ஆதலால் இவ்வேந்தன் தங்களிடமுத்திரவு பெற்றுக்கொண்டு பிலத்திற் பிரவேசிக்க விரும்புகிறார். இவ்வரசன் நுழைவதானால் காவேரியுன்னகவோடட்டும் தங்களருள் நிரம்பிய பார்வையினாலேயே அரசனுக்கனுமதி கொடுப்பீராக.

त्वद्वचस्सत्यमेवास्तु नान्यथा मुनिभाषितम् ।

உம் வார்த்தையும் உண்மையாகவே இருக்கட்டும். மஹரிஷிகளினுரை வீணாகாதல்லவா. சிவபக்த சிரேஷ்டராகிய உம்மை தரிசித்ததினாலேயே இம்மன்னனுக்குஞ் சிவலோகங்கிட்டும்.

மந்திரிகளின் அம்மொழியைக்கேட்ட முனிவர் வெகுநேரம் ஆலோசித்து சோழ அரசனையும் அரசியையும் முன்னின்ற குடிகளையும் நோக்கி உரைக்கலானார்.

ஹேரண்டமுனிவர்:— நானோ கிழவன், தவத்தால் மிக்க மெலிந்தவன், கைலாஸத்தையுமடைய விரும்புகிறேன். சோழ ராஜ்யத்திலேயே கோடீச்சுவரரின் முன்னிலையில் தவஞ் செய்து வந்தேன். எல்லோருக்குமுபகரிப்பதன்பொருட்டு என் சரீரங் கொடுக்கத் தக்கதென்பதற்கையமில்லை. ததீசி என்பவர் தேவ கார்யத்திற்காக தேகத்தைக் கொடுத்துச் சுவர்க்கம் பெற்றார். என்னுரை பொய்யாகா. மெய்யாகவேயாகுமென்பதிற் சந்தேகமில்லை. இவ்வரசனும் தீர்க்காயுள் பெறட்டும். இவ்வரசியும் தீர்க்க ஸுமங்கிலியாகவே இருக்கட்டும். சிவகைங்கர்யத்தின் மிக்கப் பற்றுதலுடையவோர் மகனுமுதிக்கப் போகிறான். அரசனும்குடிகளைக்காப்பாற்றிவாட்டும். நான் பிலத்தில் நுழையப்போகிறேன்.

அதுகேட்ட அவ்வரசன் நானொருவனிருக்கையில் நீங்களிவ்விதஞ் செய்யத்துணிவது தகுதியன்று. என்பொருட்டோர் சிவ

பக்தனாகிய பிராம்மணனுயிரை இழக்கவேண்டி ஏற்படும். பிரும்ம ஹத்திதோஷமென்னல் தாங்கமுடியாது என்றான்.

அப்பொழுது ஹேரண்டமுனிவர் அரசனைக் கூறலானார்.

ஹேரண்டமுனிவர்:— ஸர்வலோகோபகாரமாக நானே என்னுடைய உடலையளிக்கிறேன்.

शिवाग्रे यस्त्यजेद्देहं शिवसायुज्यमेति सः ।

சிவனுடைய முன்னிலையில் உடலையொழிப்பவன் சிவசாயுஜ்யம் பெறுவான். ஏ அரசசிரேஷ்டனே! உனக்குச் சிறிதும் பாவம் நேரிடாது.

இவ்வாறு கூறிக்கொண்டிருக்கையில் தலையிற் பூமாறி பொழிந்தது. தேவதுந்துபி வாத்தியங்கள் முழங்கின. ஸ்வர்க்கத்தினின்றும் ஓர் விமானமும் வந்தது.

ஹேரண்டர் என்னும் சித்தர் குடிகளுடனும், வேந்தனுடனும் வேகமாய்ச் சென்று, காவேரியில் மூழ்கி, சிவனையும் கணபதியையும் வணங்கி, பஸ்மருத்திராக்ஷங்கள் அணிந்து, மஹேசனை மனதில்தியானித்துக்கொண்டு பிலத்தை மும்முறை வலம்வந்து அதனுள் நுழைந்தார். அதினின்றும் ஹேரண்டேசர் என்னும் ஓர்லிங்கம் வெளிவந்தது. காவேரியில் முன்போற் பிரவாஹம் போகலாயிற்று. ஹேரண்டரும் விமானத்தின்மீது ஏறிக்கொண்டு 'ஏ சிறந்த வேந்தனே! நீ இந்த க்ஷேத்திரத்தில் கோடீசருக்குக் கைங்கர்யம் செய்வாயாக'வெனக்கூறிச் சென்றார்.

அரசனும் ஹேரண்டரின் ஆணைப்படி தேர்ந்த சிற்பிகளைக் கொண்டு பிராகாரங்கள் கோபுரங்களுடன் கோடீசராலயத்தைக் கட்டுவித்தான். தக்ஷிணாவர்த்தேசருக்குப் பிராகாரங்களையும் கோபுரத்தையும், சுவேதவிநாயகருக்கு ஓர் அழகிய கர்ப்பக்கிருஹத்தையும், முன்னலே மிக்க ஆச்சரியகாமான அழகிய கம்பங்களுடன் ஒரு திவ்யமண்டபத்தையும் நிர்மாணஞ்செய்தான். மத்தியார்ச்சுனேசரின் நிருருதியில் நாகேசருடைய ஆலயத்தில் திக்குகளிலுயர்ந்த கோபுரங்களைக் கட்டினான். மற்றும் பலசிவாலயங்களையுஞ்செய்து, நீதிவழுவாது உலகாண்டு 70வது வயதின்முடிவில் சந்திரசோழனென்னும் தன் மகனுக்குப் பட்டஞ்சூட்டித் தன் மனையாளுடன் சிவபதம்பெற்றான்.

ஸூதர்:— இச்சோழமன்னனின் சரிதம் கூறுமிவ்வத்தியாயத்தை கேட்பவர்களின் பாபங்கள்விலகிப் புண்ணியமும் பெருகும்.

हितं न वाच्यं ह्यहितं न वाच्यं हिताहितं नैव तु भाषणीयम् ।
हितोपदेशेन कपालभिक्षुः हेरण्डको नाम बिलं प्रविष्टः ॥

ஒருவருக்கு ஏற்படும் நன்மையையும் கூறக்கூடாது. தீமையையும் சொல்வது தகாது. நன்மை தீமைகளை உரைக்கவேகூடாது கபாலத்திற் பிச்சைபுகுந்துண்ணும் ஹேரண்டகர் என்னும் முனிவர் நன்மைகூறியதன்பயனாகப் பிலத்தில் நுழைந்தனர்.

N. வைத்யனாதசாஸ்திரி.

புத்தகவரவு.

கும்பகோணத்தில் வஸிக்கும், வி. கே. ராமாநுஜாசாரியார் அவர்கள் "சிரௌதம்" என்ற அரியதோர் புஸ்தகம் எழுதி அச்சிலியற்றிப் பிரசுரம செய்திருக்கிறார்கள். வைதிககர்மங்களில் அதிலும் சிரௌதகர்மங்களில் பிரயோகஞானம் மிகவும் குறைந்திருக்கிற இக்கலிகாலத்தில் வைதிககர்மங்களில் சிரத்தையுடையவர்களுக்கு இந்தப் புத்தகம் பரமோபகாரமாயுள்ளது. தமிழ்ப் பாஷையில் எளியநடையில் எழுதப்பட்டிருப்பதால் ஸம்ஸ்கிருத பாஷையில் அதிகப் பயிற்சியில்லாதவர்களுக்கு மிக்கவாறும் உபயோகமுள்ளது. தற்போது இந்தப் புத்தகமெழுதவேண்டிய அவசியத்தை முகவுரையின் கடைசிப் பாராவில் ஆசிரியர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். முகவுரையில் தற்காலத்திய சிலரது துராக்ஷேபணைகளுக்குத் தகுந்த ஸமாதானம் கூறப்படுவது மிகவும் பாராட்டத்தக்கதாகும். ஆறுபாகமாகப் பிரிக்கப்பட்ட இந்நூலின், 195 பாராக்களிலும் சிரௌதகர்ம ஸம்பந்தமான ஸகலவிஷயங்களும் சுருக்கமாகவும் தெளிவாகவும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றனவென்பது புஸ்தகத்தைப் பார்த்த க்ஷணமே புலப்படும். 222-பக்கங்களடங்கிய இந்தக் கிரந்தத்திற்கு விலை 1-ரூபாய் வைக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் ஷை ஆசாரியர் அவர்களிடத்திலும், கும்பகோணம், பாட்டாசாரியார்தெரு, ஸ்ரீ ஸ்ரீநிவாஸவிலாஸ புத்தகசாலை, ஸ்ரீநிவாஸபாட்டாசாரியார் அவர்களிடத்திலும் கிடைக்கும். ஆஸ்திகர்களைவரும் வாங்கி பிரயோக ஞானத்தைச் சம்பாதித்துக்கொண்டு ஸத்கர்மங்களைச் செய்து சிரேயஸ்ஸை அடைவார்களாக.

ப—ர்.